நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 90/2019
அரசு தரப்புக்காக அ. சா.5 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | தொழில்/பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 11 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

25th day of June 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.43 )

நான் தற்போது விருத்தாசலத்தில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன அம்சவள்ளி எனது அக்கா, இறந்துபோன நந்தினி எனது அக்கா மகள். அ.சா.1/விஜய் எனது அக்கா அம்சவள்ளியின் மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது அக்காவிற்கு ஒரு மகள், ஒரு மகன். எனது அக்காவை ஆறுமுகன் என்பவருக்கு சாத்தனூரில் திருமணம் செய்து கொடுத்தோம். 15 வருடத்திற்கு முன்பு எனது அக்காவின் கணவர் ஆறுமுகம் டைவர்ஸ் பெற்றுக்கொண்டு போய்விட்டார். அதன்பிறகு அக்காவும் குழந்தைகளும் பக்கத்து தெருவான காரைத்தெருவில் இருந்தார்கள். எனது அக்கா மெடிக்கலில் வேலை பார்த்தார். எனது அக்காவும் ஆஜர் எதிரியும் திருமணம் செய்துகொண்டதாக எனது அக்கா என்னிடம் சொன்னார். எனது அக்காவும் அவரது மகனும் சென்னைக்கு சென்றுவிட்டார்கள். அக்கா மகளை நான் வளர்த்துக்கொண்டு இருந்தேன். நந்தினி கல்லூரி படித்தார். இறப்பதற்கு மூன்று மாதம் முன்பு அம்மாவை போய் பார்ப்பதாக நந்தினி சொன்னார். சென்னையில் இருந்த அக்கா அம்சவள்ளியிடம் போனார். அதன்பிறகு குடும்பத்தோடு விருத்தாசலம் கைகோலர் தெருவில் வாடகை வீட்டில் அக்கா அம்சவள்ளி, அக்கா மகள் நந்தினி, அக்கா மகன் விஜய், எதிரி வேல்முருகன்

ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள். இரண்டாவது வருடம் கல்லூரி படிப்பதற்காக பணம் வேண்டும் என்று அக்கா மகள் என்னிடம் கேட்டார். நானும் எனது தங்கை மீனாட்சியும் சேர்ந்து அந்த ஐம்பதாயிரம் பணத்தை ரெடி பண்ணி அம்சவள்ளி, நந்தினி ஆகியோரிடம் கொடுத்தோம். அன்று இரவு பணத்தை கொடுத்துவிட்டு திண்பண்டங்கள் வாங்கி கொடுத்துவிட்டு நான் வீட்டிற்கு போய் விட்டேன். மறுநாள் காலை 06.00 மணிக்கு (சாட்சி மீண்டும் சொல்கிறார் நேரம் சரியாக தெரியவில்லை 06.00 முதல் 06.30க்குள்) என் வீடு உள்ள குட்டைக்காரத்தெருவிற்கு வந்து அம்மாவும் அக்காவும் எரிந்துவிட்டார்கள் என்றும் எதிரி வேல்முருகன் பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விட்டதாகவும் சொன்னார். உடனே அம்சவள்ளி வீட்டிற்கு நானும் எனது அம்மாவும் போனோம். எனது அம்மா பின்னால் ஓடி வந்தார் நான் முதலில் போய்விட்டார். எனது அக்கா எரிந்த நிலையில் இருந்தார் நான் அந்த பக்கத்தில் இருந்த போர்வையை அக்கா மீது போட்டு அணைத்தேன். அதற்கு முன்பே அவர்கள் கீழே உருண்டு இருந்தார்கள். லைட்டாக எரிந்து கொண்டு இருந்தார்கள். அதை நான் அணைத்தேன். நான் நந்தினி எங்கே என்று கேட்டேன். பாத்ரூமில் இருந்து எரிந்த நிலையில் டிரஸ் முழுவதும் எரிந்த நிலையில் வந்தார். நான் கேட்டதற்கு அந்த நேரத்தில் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. விருத்தாசலம் கவர்மெண்ட் ஆஸ்பித்திரிக்கு நானும் எனது அம்மாவும் இரண்டு பசங்களும் விஜய், எனது அக்கா அம்சவள்ளி, அக்கா மகள் நந்தினி ஆகியவர்களை கூட்டிக்கொண்டு போனோம். விருத்தாலசம் ஜிஎச்–ல் ரொம்ப மோசமாக இருக்கிறது எதுவும் முடியாது. விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு போங்கள் என்று சொல்லி அங்கிருந்த ஆம்புலன்சில் முண்டியம்பாக்கம் ஆஸ்பித்திரிக்கு போனோம். எனது அக்கா மகள் 7 நாள் சிகிச்சை பெற்றார். அதன் பிறகு இறந்துவிட்டார். எனது அக்கா அம்சவள்ளி நந்தினி இறந்த பிறகு 3 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். நான் முதலில் எனது அக்கா மகள் நந்தினியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். எனது அக்கா மகள் " நீங்கள் கொடுத்த பணத்தை வைத்திருந்தோம் அதை வேல்முருகன் எடுத்துக்கொண்டு தரமாட்டேன் என்று காலையில் சொன்னதாகவும் அதற்கு எனது அக்கா எனது தங்கச்சியும் தம்பியும் தானே பணம் தருகிறார்கள் நீ ஏன் அதை எடுத்து வைத்துக்கொண்டாய் என்று வேல்முருகனிடம் கேட்டதாக சொன்னார்கள். படிப்பதற்கு அனுப்பி வைக்ககூடாது . பணம் த ரமுடியாது என்று வேல்முருகன் சொன்னதாக சொன்னார். பணம் தரமுடியாது என்று சொன்னவுடன் என்ன செய்வது என்று புரியாமல் தனது அம்மா வீட்டில் இருந்த பெட்ரோலை எடுத்து தனது மேலே ஊற்றிக்கொண்டு கொளுத்தி கொள்வதாக மிரட்டினார். பிறகு அம்சவள்ளி புது தீப்பெட்டியால் பற்ற வைத்துக்கொண்டிருந்தபோது வேல்முருகன் உன்னால் தானே அம்சவள்ளி கொளுத்திக்கொண்டது என்று சொல்லி நந்தினி மீதும் பெட்ரோலை ஊற்றி அம்சவள்ளியின் எரிந்த உடல் மீது தள்ளிவிட்டதாக

சொன்னார். எனது அக்காவிடம் உங்கள் இருவரின் சண்டையில் நந்தினியை கொளுத்தி விட்டீர்களே நான் தானே வளர்த்துக்கொண்டிருந்தேன் என்று கேட்டேன். அதற்கு அம்சவள்ளி அழுதுவிட்டு மறுநாள் என்னை கூப்பிட்டு நான் தான் இப்படி தவறான வழியில் போய்விட்டேன் எனது பெண்ணை நன்றாக பார்த்துக்கொள் என்று என்னிடம் சொன்னார்." நான் அவரை திட்டிவிட்டு அதன்பிறகு அவரிடம் பேசவில்லை. (சாட்சி கண் கலங்கினார். அவருக்கு தண்ணீர் குடிக்க கொடுத்து ஆசுவாசப்படுத்தப்பட்டது). எனது அக்காவிடமும் எனது அக்கா மகளிடமும் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் போலிசார் விசாரித்தார்கள். ஜட்ஜ் மேடம் ஒருவர் எனது அக்காவையும் எனது அக்கா மகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது மாமா ஆறுமுகத்துடன் வாழாமல் எனது அக்கா தனியாக வந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மாமாவுடன் இல்லாததால் எனது வீட்டிற்கு வரவேண்டாம் என்று எனது அக்காவிடம் சொல்லிவிட்டு எனது அக்கா மகளை மட்டும் கூட்டிக்கொண்டேன் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் " *இறப்பதற்கு மூன்று மாதம் முன்பு அம்மாவை போய் பார்ப்பதாக நந்தினி சொன்னார். சென்னையில் இருந்த அக்கா அம்சவள்ளியிடம் போனார்."* என்ற விவரத்தையும் *"இரண்டாவது வருடம் கல்லூரி படிப்பதற்காக பணம் வேண்டும் என்று அக்கா மகள் என்னிடம் கேட்டார். நானும் எனது தங்கை மீனாட்சியும் சேர்ந்து அந்த ஐம்பதாயிரம் பணத்தை ரெடி பண்ணி அம்சவள்ளி, நந்தினி ஆகியோரிடம் கொடுத்தோம்."* என்ற விவரத்தையும் *" என் வீடு உள்ள குட்டைக்காரத்தெருவிற்கு வந்து அம்மாவும் அக்காவும் எரிந்துவிட்டார்கள் என்றும் எதிரி வேல்முருகன் பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விட்டதாகவும் சொன்னார். "* என்ற விவரத்தையும் *" நான் அந்த பக்கத்தில் இருந்த போர்வையை அக்கா மீது போட்டு அணைத்தேன். அதற்கு முன்பே அவர்கள் கீழே உருண்டு இருந்தார்கள். லைட்டாக எரிந்து கொண்டு இருந்தார்கள். அதை நான் அணைத்தேன். "* என்ற விவரத்தையும் *" நான் நந்தினி எங்கே என்று கேட்டேன். பாத்ரூமில் இருந்து எரிந்த நிலையில் டிரஸ் முழுவதும் எரிந்த நிலையில் வந்தார்."* என்ற விவரத்தையும் *" நான் முதலில் எனது அக்கா மகள் நந்தினியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். எனது அக்கா மகள் " நீங்கள் கொடுத்த பணத்தை வைத்திருந்தோம் அதை வேல்முருகன் எடுத்துக்கொண்டு தரமாட்டேன் என்று காலையில் சொன்னதாகவும் அதற்கு எனது அக்கா எனது தங்கச்சியும் தம்பியும் தானே பணம் தருகிறார்கள் நீ ஏன் அதை எடுத்து வைத்துக்கொண்டாய் என்று வேல்முருகனிடம் கேட்டதாக சொன்னார்கள். படிப்பதற்கு அனுப்பி வைக்ககூடாது . பணம் த ரமுடியாது என்று வேல்முருகன் சொன்னதாக சொன்னார். பணம் தரமுடியாது என்று சொன்னவுடன் என்ன செய்வது என்று புரியாமல் தனது அம்மா வீட்டில் இருந்த பெட்ரோலை எடுத்து தனது மேலே ஊற்றிக்கொண்டு கொளுத்தி கொள்வதாக மிரட்டினார். பிறகு அம்சவள்ளி புது தீப்பெட்டியால் பற்ற வைத்துக்கொண்டதாக"* என்ற விவரத்தையும் *" எனது அக்காவிடம் உங்கள் இருவரின் சண்டையில் நந்தினியை கொளுத்தி*

*விட்டீர்களே நான் தானே வளர்த்துக்கொண்டிருந்தேன் என்று கேட்டேன். அதற்கு அம்சவள்ளி அழுதுவிட்டு மறுநாள் என்னை கூப்பிட்டு நான் தான் இப்படி தவறான வழியில் போய்விட்டேன் எனது பெண்ணை நன்றாக பார்த்துக்கொள் என்று என்னிடம் சொன்னார்." நான் அவரை திட்டிவிட்டு அதன்பிறகு அவரிடம் பேசவில்லை."* என்ற விவரத்தையும் நான் சொல்லியதை போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் இந்த விவரத்தை போலிசார் என்னை விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றும் முதன்முதலாக தற்போது நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விருத்தாசலம் ஜிஎச்–ல் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் எத்தனை முறை விசாரித்தார்கள் என்று கேட்டால் 4, 5 முறை விசாரித்தார்கள். நான் எத்தனை முறை கையெழுத்து போட்டேன் என்றால் 4. 5 முறை கையெழுத்து போட்டேன். ஜட்ஜ் அம்மா விசாரிக்கும்போது உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். ஆனால் என்னை வெளியே போக சொல்லிவிட்டார்கள். விருத்தாசலம் ஆஸ்பித்திரியில் டிரிட்மெண்ட் கொடுத்த டாக்டர் எனது அக்காவிடமும் எனது அக்கா மகளிடமும் என்ன நடந்தது என்று விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது அக்கா தவறாக இருந்துவேறு வகையில் இறந்ததற்கு எதிரியை குற்றம்சாட்டி பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 04.23)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.